# நீதி அமைச்சு

## 1979 இன் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவை சட்டத்தின் 108 ஆம் பிரிவின் கீழ் திடீர் மரண விசாரணை அலுவலர்களை நியமனம் செய்வதற்கான விண்ணப்பம் கோரல் - 2021

இதன் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திடீர் மரண விசாரணை அலுவலர் பிரிவுகளில் வெற்றிடமாகக் காணப்படுகின்ற திடீர் மரண விசாரணை அலுலவர் பதவிகளுக்கு தகைமை பெற்றுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. இங்கு கீழே தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமையத் தயார் செய்துகொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவங்களை “செயலாளர், நீதி அமைச்சு, மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி, கொழும்பு 12” எனும் முகவரிக்கு 2021.02.26 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “திடீர் மரண விசாரணை அலுலவர் பதவி - ………… மாவட்டம்” எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். தாமதித்துக் கிடைக்கின்ற விண்ணப்பப்படிவங்கள் எந்தவொரு அறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும்.

03. கொவிட் - 19 தொற்று நோய் காரணமாக தபால் சேவைகளில் ஏதேனும் தாமதம் இடம்பெற முடியும் என்பதனால் அமைச்சின் www.moj.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு ஒன்லைன் மூலம் விண்ணப்பப்படிவத்தை பூரணபடுத்தி சமர்பித்தல் வேண்டும்.

04. இப்பதவி அரசாங்கத்தின் நிரந்தர பதவியொன்று அல்ல. இப்பதவிக்கு நியமனம் செய்யப்படுகின்ற திகதி முதல் வயது 60 வரை அமுலில் இருக்கும் வகையில் நியமனம் செய்யப்படுவதுடன், அதன் பின்னர் குறித்த நீதிமன்ற தத்துவஅதிகாரப் பிரதேசத்தின் நீதவானின் சிபாரிசு மற்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் அறிக்கை மற்றும் மருத்துவ சிபாரிசுகளைக் கவனத்தில் கொண்டு வயது 65 வரை சேவை நீடிப்புச் செய்யப்படும் என்பதுடன், வயது 65 இன் பின்னர் அப்பதவியை வகிப்பதற்கான உச்ச வயதெல்லையின் அடிப்படையில் வயது 70 வரை வருடாந்தம் சேவை நீடிப்புச் செய்யப்படும். எவ்வாறாயினும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் திடீர் மரண விசாரணை அலுவலர் ஒருவர் காரணங்களை குறிப்பிட்டு நீதி அமைச்சரினால் பதவியிலிருந்து நீக்கப்பட முடியும்.

05. 1979 இன் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்புடையவாறு திடீர் மரண விசாரணை அலுவலர்கள் தொடர்பிலான சகல பணிகளும் நியமன அதிகாரியினால் நிறைவேற்றப்பட வேண்டும்.

06. இப்பதவிக்கு சம்பளம் செலுத்தப்படுவதில்லை. எவ்வாறாயினும், ஒரு மரண பரிசோதனைக்கு ரூபா 1000/- ஆன கட்டணமும், மரண பரிசோதகர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட பிரயாணச் செலவினமும், திரட்டிய கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.

07. கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. நியமனத்தை எதிர்பார்க்கின்ற திடீர் மரண விசாரணை அலுவலர் நிரந்தர வசிப்பாளராக இருத்தல் வேண்டும்.
III. விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு 30 வயதுக்குக் குறையாதவராகவும், 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

IV. க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். (இதன் போது விஞ்ஞான பாடங்களில் சித்தியடைந்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

V. நன்னடத்தை உள்ளவராகவும், சிறந்த தேகாரோக்கியமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

VI. திடீர் மரண விசாரணை (முஸ்லிம்) பதவிக்கு விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரர்களுக்கு தமிழ் மொழியில் பேசுவதற்கும், எழுதுவதற்கும், வாசிப்பதற்குமான தேர்ச்சி இருத்தல் வேண்டும்.

08. விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு அரசாங்க, மாகாண சபை நிதியத்திலிருந்து அல்லது உள்ளூராட்சி மன்றமொன்றின் நிதியத்திலிருந்து சம்பளம் அல்லது கொடுப்பனவு பெறுகின்ற ஆட்களும், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்கள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும், மாகாண சபை உறுப்பினர்கள் அல்லது உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவர்களாகின்றார்கள்.

09. விண்ணப்பப்படிவத்துடன், கீழே I, II மற்றும் III இற்கான ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை அனுப்பிவைத்தல் வேண்டும். மேலும், நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகளினால் தகைமைகளை உறுதி செய்வதற்குப் போதியளவான சான்றுப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், பின்வரும் ஆவணங்ளின் மூலப் பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

I. பிறப்புச் சான்றிதழ்
II. கல்விச் சான்றிதழ்கள்
III. தேசிய அடையாள அட்டை
IV. நிரந்தர வசிப்பை உறுதிப்படுத்துவதற்கான கிராம அலுலவர் சான்றிதழ்
V. அண்மையில் பெற்றுக் கொண்ட நன்னடத்தை பற்றிய இரண்டு நற்சான்றிதழ்கள்
VI. மேலதிக தகைமைகளை உறுதி செய்வதற்கான வேறு சான்றிதழ்கள் இருப்பின் குறித்த சான்றிதழ்கள்
VII. ஓய்வுபெற்றுள்ள விண்ணப்பதாரிகள் ஓய்வுபெற்றுக் கொண்ட திகதியை உறுதி செய்வதற்கான எழுத்துமூலமான சான்றுகள்

10. சகல விண்ணப்பப்படிவங்களும் பின்வரும் மாதிரிப்படிவத்துக்கு இசைவாக தெளிவான கைஎழுத்து மூலம் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். தேவையான தகவல்கள் அனைத்தையும் உள்ளடக்காது சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப்படிவங்கள் எந்தவொரு அறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும்.

11. விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது தகைமைகள் தொடர்பில் மிக்க கவனத்துடன் சரியான தகவல்களை உட்புகுத்தல் வேண்டும். தேவையான தகைமைகள் இன்றி அல்லது மேலே (08) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகையைச் சேர்ந்த ஒருவராக இருப்பினும், விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சையின் பின்னர் நியமனம் வழங்கப்பட்டதை அடுத்து நிரந்தர அந்தஸ்து உறுதி செய்யப்படும் பட்சத்தில் அந்நியமனம் உடனடியாக ரத்துச் செய்யப்படும்.

12. மேலும், திடீர் மரண விசாரணை அலுவலர் ஒருவராக நியமனம் செய்யப்பட்ட பின்னர் மேலே 08 ஆவது பந்தியிலுள்ள பதவியொன்றுக்கு நியமனம் பெறும் பட்சத்தில் அவ்வாறு நியமனம் பெற்றுள்ள திகதி முதல் திடீர் மரண விசாரணை அலுலவர் பதவியின் நியமனம் செல்லுபடியற்றதாகும்.

எம்.எம்.பீ.கே. மாயாதுன்னே
செயலாளர்,
நீதி அமைச்சு

2021.02.01
கொழும்பு – 12,
நீதி அமைச்சில்.